[1994 ஏப்ரல் 13

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தடைப்பட்டிருந்த அந்த விழாவை மீண்டும் இன்றைக்கு அரசு விழாவாக நடத்த ஆணை பிறப்பித்த ஒடுக்கப்பட்ட மக்களின் ரட்சகராக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி, பாட்டாளி மக்கள் கட்சியினர் போராடி வருவது பற்றி என்னிடத்திலே ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி ஏற்கெனவே இந்த அவையில் சீரோ அவரிலே எழுப்பப்பட்டு, அந்தக் கட்சியினுடைய தலைவர் கைது செய்யப்பட்டிருப்பது பற்றியும், அதன் காரணமாக அந்தக் கட்சியினர் செய்து வருகின்ற பல்வேறு வன்முறைகள் காரணமாக எந்த அளவுக்கு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகிறது என்பதைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மீண்டும், அதே பொருள் பற்றி சீரோ அவரிலே கிளப்ப வேண்டுமென்று நீங்கள் கேட்பதை அனுமதிக்க இயலாது என்று தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். நீங்கள் மீண்டும் அதை எழுப்ப வேண்டுமென்று வற்புறுத்துவது சரியல்ல. அதுவே திரு. பழனிசாமிக்கும் பொருந்தும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக இந்த அவையிலே அதுபற்றி விளக்கம் கொடுத்துவிட்ட காரணத்தினால் நான் அனுமதிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) போதும், நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அது பற்றித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு, விரிவாக எந்த அளவுக்கு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் எ்டுத்துத் தெரிவித்ததோடு, இதைக் கடுமையாக ஒடுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது, அதற்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்கள். (குறுக்கீடு) அதே பொருள் பற்றி சீரோ அவரிலே கிளப்ப முடியாது என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு பொருள் பற்றி இந்த அவையிலே எழுப்பி, அதற்குப் பதிலை தெரிவித்ததற்குப் பிறகு அதே

1994 ஏப்ரல் 13]

பொருள் பற்றி இதே அவையில் திரும்ப எழுப்ப முடியாது என்பதுதான் என்னுடைய முடிவு. (குறுக்கீடு) போதும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) நீங்கள் அதைத் திரும்ப எழுப்ப முடியாது. வேறு வகையில் எழுப்புங்கள். (குறுக்கீடு) சீரோ அவரிலே அதை எழுப்ப முடியாது. (குறுக்கீடு) விதி 56-ஐ படித்துப் பாருங்கள். அதிலே ஒரு முறை, ஒரு பிரச்சினை பற்றி எழுப்பிவிட்டால், அதே பொருள் பற்றித் திரும்ப எழுப்ப முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள், நான் நிற்கிறேன். நான் நின்றால் நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) அதை வேறு வகையிலே எழுப்புங்கள். இந்தமாதிரி எழுப்பக் கூடாது.

4. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு (Board of Management) ஒரு உறுப்பினரை இச்சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கோரியுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்படுவோரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவரின் பதவிக் காலம் முடிவடையும்.

வேட்பாளர்கள் நியமனத் தாள்களை *20-4-1994* புதன்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் *21-4-1994* வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் *22-4-1994* வெள்ளிக்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் *25-4-1994* திங்கட்கிழமை